**சப்ரகமுவ மாகாண சபை - 2014**

சப்ரகமுவ மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்பட்டது. இதில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பான விரிவான அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பிப்பதற்காக காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 02. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, சப்ரகமுவ மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்குரிய மாகாண சபை நிதியக் கணக்கு 2015 மார்ச் 31 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரிய 2015 யூன் 30 இல் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் செயல்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 27 | 27 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | - | 01 |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 24 | 23 | 01 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 06 | 04 | 02 |
| (v) | நிதியக் கணக்குகள் | 02 | 02 | - |
| (vi) | நியதிச் சட்டக் கணக்குகள் | 03 | 03 | - |
| (vii) | உறுப்பினர் முற்பணக் கணக்குகள் | 02 | 02 | - |
| | | 65 | 61 | 04 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காணப்படும் மொத்த குறுங்கால முதலீடுகளின் பெறுமதிகளைப் பிரதிபலிக்கும் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 3,607,933,537 ஆக இருந்ததுடன், வங்கியால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் ரூபா 3,634,517,344 கூட்டுத்தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 11 நிலையான வைப்புக்களும் சேமிப்புக் கணக்கொன்றும் காணப்படுவதாக கண்டறியப்பட்டமையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறுங்கால முதலீடுகளின் பெறுமதி ரூபா 26,583,807 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் கீழ் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 3,368,665 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 2,670,024 ஆக இருந்தமையால் நிதி நிலைமை கூற்றில் ரூபா 698,641 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதி செயலாற்றல் கூற்றில் வரியல்லாத வருமானத்தின் கீழ் மூலதன சொத்துக்கள் விற்பனை வருமானமாக ரூபா 305,025 தொகையான மறை மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக மேலதிக பரிசோதனையின் போது ரூபா 322,000 தொகையான வருமானத்திலிருந்து மீள் கொடுப்பனவொன்றிற்குரிய வருமான குறியீட்டுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும் மாகாண நிதி விதி 296.1 இன் பிரகாரம் வருமானத்திலிருந்து மீளச் செலுத்தும் போது மாகாண வருமானக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படக் கூடாத போதும் அதற்கு முரணாக 20.06.02.01 சொத்துக்கள் விற்பனை வருமானத்தின் கீழ் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

01 கணக்கு விடயமொன்றிற்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,457,031 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/ அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 37,165,617 ஆக இருந்தமையால் ரூபா 291,414 ஆன இணங்காத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 பெறவேண்டிய கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,695,950 ஆக இருந்தது.

### 2.2.6 கணக்காய்வுக்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ஆளுனர் அலுவலகத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 18,549,089 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாண நிதி விதிக்கோவை | |
| i | மாகாண நிதி விதி 113.3.1 | விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் ,நாற்றுக்கள், உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வழங்குவதற்காக விவசாயிகளிடமிருந்து பணத்தைச் சேகரிப்பதற்குரிய வெலிகெபொல விவசாய போதனாசிரியர் அலுவலகம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகங்களைப் பரீட்சித்த போது 2014 ஆம் ஆண்டிற்குரிய இரத்தினபுரி பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட மொத்த தொகை ரூபா 135,948 இல் ரூபா 70,337 தொகைக்குரிய பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| ii | மாகாண நிதி விதி 118 | அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் அனைத்து பணத்தையும் குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், பள்ளேபத்த மாவட்ட வைத்தியசாலையால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 135,171 தொகை வங்கிக் கணக்கிற்கு அனுப்பாமல் கையில் வைத்துக் கொண்டு செலவு செய்யப்பட்டிருந்ததுடன், மாகாண விவசாயத் திணைக்களத்தினால் 36 சந்தர்ப்பங்களில் கிடைத்த ரூபா 2,077,121 கூட்டுத் தொகையான பணத்தை வங்கியில் வைப்புச் செய்யும் போது 02 நாட்கள் முதல் 13 நாட்கள் |

| | | |
|---|---|---|
| | | வரையிலான காலவீச்சிலான தாமதத்துடன் வங்கியிலிடப்பட்டிருந்தன. |
| (ஆ) | நிதி ஆணைக்குழு செயலாளரின் 2014 மார்ச் 27 ஆம் திகதிய FC/4/2014 ஆம் இலக்க கடிதத்தின் iv ஆம் பந்தி | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அவ்விடயம் தொடர்பான பொறுப்புக்களுக்குரிய அமைச்சோ அல்லது திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை வளவாளர்களாக தொடர்புபடுத்தப்பட்டால் அவர்களுக்கு அதற்காக வளவாளர் படிகள் பெற்றுக்கொள்ள முடியாத போதிலும், அதற்கு முரணாக மாகாண சபையின் 04 திணைக்களங்களால் 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 88 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வளவாளர் படிகளாக ரூபா 302,295 தொகை செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆவது அதிகாரத்தின் 226(5), (6) பிரிவுகள், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அதிகாரத்தின் 183(5) பிரிவு மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(8), (9) ஆம் பிரிவுகள் | ஏற்பாடுகளின் பிரகாரம் மிகை அறவீடுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானம் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய ஆளினால் உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு உரிய பணத்தை செலுத்தாதிருந்தால் மற்றும் மேன்முறையீடொன்று மேற்கொள்ளப்படாதிருந்தால் குறித்த ஆள் வசிக்கும் பிரதேசத்தின் நீதிமன்ற அதிகாரமுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து குறித்த பணத்தை அறவிடுவதற்கு உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அவ்வகையில் நடவடிக்கை எடுக்கப்படமையால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மிகை அறவீட்டு சான்றிதழ்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 22 மிகை அறவீட்டு சான்றிதழ்களின் கீழ் ரூபா 2,104,564 கூட்டுத்தொகையான அளவில் அறவிடப்பட வேண்டியிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஈ) | கல்வி அமைச்சு செயலாளரின் ஈடி/03/37/6/134 ஆம் இலக்கம் மற்றும் 2013 நவம்பர் 28 ஆந் திகதிய 7/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | |
| (i) | 7.2 ஆம் பிரிவு | பாடசலைகளுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் தவிர வேறு எவ்வித பணத்தையும் பெற்றோரிடமிருந்து அறவிடப்பட முடியாத போதிலும், மாவனல்ல பிரதேசத்தின் பாடசாலையொன்றில் 2015 ஆம் ஆண்டின் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் போது ஒரு மாணவருக்காக ரூபா 5,000 வீதம் 305 மாணவர்களிடமிருந்து 1,525,000 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பற்றுசீட்டு வழங்கவோ அல்லது வங்கியில் வைப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | 14.1.06 ஆம் பிரிவு, 14.08 ஆம் பிரிவு மற்றும் 14.1.11 ஆம் பிரிவு | கொடுப்பனவை மேற்கொள்ளும் போது பொது 35 மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்ட உறுதிச்சீட்டு பாடசாலையின் அதிபரால் அங்கீகரிக்கப்பட்டு பிரதி அதிபரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், இரத்தினபுரி மாவட்டத்தின் மூன்று கல்வி வலயத்தின் 04 பாடசாலைகளினால் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 518,388 கொடுப்பனவு செய்யும் போது உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், ரூபா 672,526 கூட்டுத்தொகையான 177 உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படாதிருந்தன. மேலும் ரூபா 665,726 கூட்டுத்தொகையான 176 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அதிபரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 537,275 கூட்டுத்தொகையான 10 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (உ) | ஆளுனர் செயலாளரின் 2013 நவம்பர் 14 ஆந் திகதிய ஆளு/7/3/08 ஆம் இலக்க கடிதம் | இரத்தினபுரி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் சுகாதாரத் துறையை அறிவூட்டுவதற்காகவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்தும் போது கொடுப்பனவு செய்வதற்கு அடிப்படையாகக் கொண்டிருந்த ஆளுனர் செயலாளரின் மேற்குறித்த கடிதத்திற்கு முரணாக உபசரிப்பு நடவடிக்கைகள், எழுதுகருவிகள் மற்றும் எரிபொருள் தங்குமிட வசதிகளுக்காக ரூபா 84,932 கூட்டுத்தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன |

## 2.4 போதியளவு அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மார்ச் 25 ஆம் திகதிய FC/Scbp/4/2/2014 ஆம் திகதிய நிதி ஆணைக்குழு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் ஆயுர்வேதத் திணைக்களத்தின் 2014 வருடாந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பிரசுரங்களையும் புத்தகங்களையும் அச்சிடுவதற்காக செலவிட முடியாத போதிலும், அதற்கு முரணாக பிரசுரங்களையும் புத்தகங்களையும் அச்சிடுவதற்காக ரூபா 105,500 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மாகாணத்தின் மருந்துகள் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மாகாணத்திற்கு வெளியே கொண்டு செல்லப்படும் மருத்துவச் செலவினத்தில் ஆகக்குறைந்தது 40 சதவீதத்தையாவது மாகாணத்தினுள் தக்கவைத்துக்கொள்ளல், மாகாண முடிவுறுத்தப்பட்ட மற்றும் காய்ந்த மருந்துத் தேவைப்பாட்டின் 75 சதவீதத்தை மாகாணத்தினுள் உற்பத்தி செய்தல் மற்றும் உயர் தரத்திலான மூலப்பொருட்களை மருந்து உற்பத்திக்காக பயன்படுத்துதல் அடிப்படையில் சிகிச்சை சேவைகளை தரமான நிலைமையில் மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ரூபா 5.35 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் நடாத்திச் செல்லப்படும் இரத்தினபுரி மருந்து உற்பத்திச்சாலையை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக 2013 ஒக்தோபர் 29 ஆம் திகதிய நிதி ஆணைக்குழுவின் FC/SG/4/2/2013 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அச்செயற்திட்டத்தை அமுல்படுத்தாமல் உரிய அங்கீகாரமின்றி ரூபா 47 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் ரம்புக்கன வல்கம மாகாண மருந்து உற்பத்திச்சாலையையும் மத்திய மருந்தகத்தையும் நிர்மாணிப்பதற்கு தீர்மானித்து செயற்திட்டத்தின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த சப்ரகமுவ தலைமை அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்படாத, தலைமை அமைச்சருக்கான மதியுரையாளர் பதவியொன்றுக்காக 2014 மார்ச் 20 ஆம் திகதிய ஆளுனர் செயலாளரின் ஆ.கா./சலே/2/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதி முதல் மதியுரையாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அத்திகதியிலிருந்து 2015 பெப்ரவரி மாதம் வரையிலும் படிகளாக ரூபா 938,417 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

## 03. வருமான முகாமைத்துவம்

### 3.1 கடந்த 05 ஆண்டுகளில் வருமான பரவல்

கடந்த 05 ஆண்டுகளில் மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட வரி வருமானம் மற்றும் வரியல்லாத வருமானம் பின்வருமாறு காணப்பட்டன.

| ஆண்டு | வரி வருமானம் | வரி அல்லாத வருமானம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2009 | 1,146,644,488 | 271,623,594 |
| 2010 | 1,382,363,156 | 321,209,919 |
| 2011 | 1,943,637,444 | 416,079,145 |
| 2012 | 2,007,749,583 | 496,404,402 |
| 2013 | 2,163,127,945 | 496,000,276 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சப்ரகமுவ மாகாணத்தின் 09 பிரதேச செயலகங்களால் பல்வேறு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளுக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 18,421,380 கூட்டுத்தொகையான நீண்டகால குத்தகை மற்றும் தண்டப்பணமும், ரூபா 4,446,704 கூட்டுத்தொகையான வருடாந்த குத்தகை மற்றும் தண்டப்பணமும், 02 பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 175,984 கூட்டுத்தொகையான விளைச்சல் வரியும் 2015 யூலை மாதம் வரை நிலுவையாக காணப்பட்டதுடன், அது தொடர்பாக 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 96/05 ஆம் இலக்க காணி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 02 பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 7,137,892 தொகையான நீர் வரி மற்றும் தண்டப்பணமும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) கலவான பிரதேச செயலகத்தினால் தனியார் நிறுவனமொன்றிற்கு 2004 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணியொன்றிக்கு 2004 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை நீண்டகால குத்தகையோ அல்லது வருடாந்த குத்தகையோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதிசார் மீளாய்வு

### 4.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 1,415,104,004 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,916,626,676 ஆக இருந்தது.

### 4.2 மாகாண சபைக்கு எதிராக அல்லது மாகாண சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

மாகாண சபையின் 11 அமைச்சுக்கள்/ திணைக்களங்களிற்கு எதிராக வெளித்தரப்பினரால் தொடரப்பட்டிருந்த 68 சட்டரீதியான வழக்குகளும் 04 அமைச்சுக்கள்/ திணைக்களங்களினால் வெளித்தரப்பினருக்கு தொடரப்பட்டிருந்த 06 சட்டரீதியான வழக்குகள் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையில் விசாரணை நிலையில் காணப்பட்டன.

### 4.3 செலவினங்களில் அசாதாரண அதிகரிப்பு

மீளாய்வாண்டின் உள்ளவாறான செலவினத்தை 2013 ஆம் ஆண்டின் உள்ளவாறான செலவினத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய உள்ளவாறான செலவினம் 2013 ஆம் ஆண்டின் செலவினத்தை விட 37 சதவீதத்திலிருந்து 635 சதவீதம் வரையான வீச்சில் அசாதாரணமாக அதிகரித்திருந்தன.

**05. அதிகாரசபைக் கணக்குகள்**

**சப்ரகமுவ மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் அதிகாரசபைக்குரிய பிரதம அமைச்சரின் கடமை நடவடிக்கைகளுக்காக சாரதிகளுடன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2014 ஆம் ஆண்டில் எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவினமாக ரூபா 1,997,820 தொகை பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

ii. 1994 இன் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவைகள் நியதிச்சட்டத்தின் 3(ஆ)v பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் உறுப்பினரொருவராக மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நியமிக்கப்படாமல் இருந்ததுடன், பணிப்பாளர் சபையின் மூன்று அங்கத்தவர்களுக்கு படிகளுக்கு மேலதிகமாக வெளிக்கள நடவடிக்கைகளுக்காக ரூபா 15,000 வீதம் 2014 சனவரி முதல் திசம்பர் வரை ரூபா 285,000 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன.

iii. பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த நிதியத்திற்கு உறுப்புரையொன்றும் விதிக்கோவையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பேரூந்து உரிமையாளர்களுக்காக, ஊழியர் நலன்புரிக்காக இந்நிதியத்திலிருந்து எதுவித தொகையும் செலவு செய்யப்பட்டிராததுடன் 2013 மற்றும் 2014 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்காக கிடைக்கப்பெற்ற ரூபா 6,721,543 தொகையில் ரூபா 6,559,719 தொகை அதிகாரசபையின் நோக்கத்திற்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

iv. சப்ரகமுவ மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் முன்னாள் தலைவருக்கு உரித்தான போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய 06 பேரூந்துகளுக்காக எதுவித அனுமதிப்பத்திர மொன்றையும் பெற்றுக்கொள்ளாமலும், வருடாந்தம் புதுப்பிக்காமலும் மாதாந்தம் லொக் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமலும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கணக்கிடும் போது அதிகாரசபைக்கு ரூபா 723,000 அளவிலான

நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. மேலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மூலம் அனுமதிப்பத்திரங்களை வழங்கிய 11 பேரூந்துகளுக்காக மாதாந்தம் லொக் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 64,150 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

v. 2013 யூலை 09 ஆம் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 150,000 இற்கு கூடுதலான தண்டப்பண வருமானமொன்று இருக்கும் போது மாத்திரம் அது 30 சதவீத தரகொன்றினை வீதிப் பரிசோதகர்களுக்கு செலுத்த முடியுமான போதிலும், அதற்கு முரணாக 2014 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 229,054 தொகை தரகுப்பணமாக கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

vi. முன்னாள் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த நிலையான தொலைபேசியின் இணைப்பை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2014 பெப்ரவரி முதல் 2015 சனவரி வரை ரூபா 63,995 தொகையான பட்டியல் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

vii. 1994 இன் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவைகள் நியதிச்சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 2001 இன் சப்ரகமுவ மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் (நிர்வாக மற்றும் நிதி) விதிகளின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபைக்காக மாகாண ஆளுனரினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் இருக்க வேண்டிய போதிலும், 2015 பெப்ரவரி 23 ஆம் திகதி வரையிலும் பதவியணியினரை அங்கீகரித்துக் கொண்டிருக்கவில்லை. அத்துடன், ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஊழியர் நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கோவையொன்று தயாரித்துக்கொள்ளப்பட வேண்டியதுடன், தாபன விதிக்கோவையின் நியதிகளையும் பின்பற்ற வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் எந்தவொரு ஒழுக்காற்று நடைமுறையொன்றும் இல்லாமல் தனிப்பட்ட காரணங்கள் அடிப்படையில் ஊழியர்களின் வேலையை இடைநிறுத்தியமையால் அசாதாரணத்திற்குட்பட்டிருந்த சில ஊழியர்கள் வழக்குத் தொடர்ந்திருந்தனர். அவ்வாறு தொடரப்பட்டிருந்த வழக்குகளிலிருந்து நிறுவகம் குற்றவாளியாக இருந்ததுடன், ஒரு வழக்கிற்காக வழக்குக் கட்டணமாக 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 59,000 தொகை சிக்கனமற்ற கொடுப்பனவாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

viii. அதிகாரசபையின் நிரந்தர எழுதுனரொருவர் 2009 யூலை 24 ஆம் திகதி முதல் 2009 நவம்பர் 05 வரை தலைமை அமைச்சரின் அலுவலகத்தின் சேவைக்காக விடுவிக்கப்பட்டு அவருக்காக ரூபா 61,412 தொகை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2012 நவம்பர் 02 ஆம் திகதி அதிகாரசபையினால் செயற்பாட்டுப் பொறுப்பு உத்தியோகத்தராக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த நபர், சாரதியொருவராக தலைமை அமைச்சரின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அத்தினத்திலிருந்து மாதமொன்றுக்கு ரூபா 12,500 வீதம் மொத்தம் ரூபா 450,000 அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**06. செயற்பாட்டு மீளாய்வு**

**6.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆயுர்வேதத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட மகப்பேற்று மற்றும் சிறுவர் போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஆரம்பத்திலிருந்தே தெரிவு செய்யப்பட்ட இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களின் ஒரே 05 பிரதேச செயலகப் பிரிவுகள் வீதம் தெரிவு செய்யப்பட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் மாகாணத்தினுள் பிரிந்து செல்வதில் முரண்பாடொன்று அவதானிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக முன்னைய கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் எதுவித கவனமும் செலுத்தாமல் மீளாய்வாண்டின் போதும் அப்பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டின் போது இச்செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 31 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டு வரையில் இரத்தினபுரி மாவட்டத்தின் 10 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கேகாலை மாவட்டத்தின் 02 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் எதுவித ஆயுர்வேத சிகிச்சை நிலையமொன்றும் இல்லாதிருந்த நிலைமையில் 2014 ஆம் ஆண்டின் மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மற்றும் புடவைக் கைத்தொழில் நிலையங்கள் என்பவற்றைப் உபயோகித்து சப்ரகமுவ மாகாணத்தின் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் 05 மத்திய மருந்தகங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,500,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த

போதிலும், 2014 ஆம் ஆண்டினுள் அச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(இ) இர/மெத்தகன்த தமிழ் வித்தியாலயத்தில் 2013 கல்விப் பொது தராதர சான்றுப்பத்திர சாதாரண தர பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடைதல் 40 சதவீதத்திற்கும் குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன், 7, 9 மற்றும் 11 ஆம் ஆண்டுகளில் தவணைப் பரீட்சைப் பெபேறுகளின் பிரகாரம் மாணவர்களில் 70 சதவீதம் அளவில் கணிதம் மற்றும் ஆங்கிலம் போன்ற விடயங்களுக்காக புள்ளிகள் 30 புள்ளிகளை தாண்ட முடியாதிருந்தது.

(ஈ) இ/ஸ்ரீ/வலகம்பா மஹா வித்தியாலயத்தின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கடந்த 5 ஆண்டுகளில் பெறுபேறுகளை மீளாய்வு செய்த போது கணித பாடத்தில் 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரையிலும் ஆங்கில பாடத்தில் 10 சதவீதத்திலிருந்து 27 சதவீதம் வரையிலும் விஞ்ஞான பாடத்தில் 44 சதவீதத்திலிருந்து 65 சதவீதம் வரையிலும் குறைந்த வீச்சில் சித்தியடைந்திருந்தனர்.

## 6.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண அரசாங்க சேவைக்கு உள்ளீர்க்கப்படாததன் காரணமாக 2013 ஆம் ஆண்டிலிருந்து ஒழுக்காற்று கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதிருந்த உள்ளூராட்சி மன்ற நிறுவனமொன்றில் சேவை புரியும் உத்தியோகத்தரொருவர் 2014 பெப்ரவரி 19 ஆந் திகதி மாகாண அரசாங்க சேவைக்கு உள்ளீர்க்கப்படும் போது சப்ரகமுவ மாகாண தலைமை அமைச்சின் செயலாளரின் சீஎம்/ஏடி/03/02/06 மற்றும் 2014 மே 12 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட தண்டணைக் கட்டளைக்கு கீழாக ஓய்வூதியச் சம்பளத்தை கொடுப்பனவு செய்வதற்காக 2014 யூலை 11 ஆம் திகதிய PH/P/2/1571 ஆம் இலக்க தலைமை செயலாளருக்கு விலாசமிடப்பட்ட பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளின் கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 23 ஆம் திகதி வரையிலும் அந்த ஒழுக்காற்று கட்டளை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் மாகாண சபையின் 08 அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் என்பவற்றிற்கு வழங்கப்பட்டிருந்த 42 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அந்த ஐயவினாக்களுக்குட்பட்ட கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா

221,382,650 ஆக இருந்தது.

**6.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆயுர்வேதத் திணைக்களத்தின் 2014 இன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹிந்தோதய மூலிகைத் தோட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 292,000 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 100 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு நாற்றுக்கள் மற்றும் பெயர்ப்பலகை என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 156,800 செலவிடப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட நாற்றுக்கள் மற்றும் பெயர்ப் பலகைகள் என்பன 2015 ஏப்ரல் 07 ஆந் திகதி வரையிலும் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படாதிருந்ததுடன், அப் பெயர்ப்பலகைகள் திணைக்களத்தில் களஞ்சியப்படுத்தியிருந்தமையும் கொள்வனவு செய்யப்பட்ட நாற்றுக்கள் வழங்குனரிடம் வைக்கப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) உதுகொடை கால்நடை கட்டுப்பாட்டு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் 2015 பெப்ரவரி 25 ஆந் திகதி உள்ளவாறு விற்பனைக்கூடத்தின் பதிவேட்டின் பிரகாரம் இருக்க வேண்டிய இருப்பு பௌதீக பரிசோதனையின் போது ரூபா 42,560 கூட்டுத்தொகையான நான்கு இருப்பு உருப்படிகளில் பற்றாக்குறை காணப்பட்டதுடன், விற்பனைக்கூடத்தின் இருப்பு பராமரிப்பிற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாடொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உடவளவ பிரதேச வைத்தியசாலையின் நாளாந்த நடவடிக்கைகளை வினைத்திறனாக பேணிச் செல்வதற்கு தேவையான 09 கட்டிடங்கள் தொடர்பான திருத்த நடவடிக்கைகளும் 04 இயந்திர உபகரணத் தேவைப்பாடுகளும் வருடக் கணக்காக தேவையாக இருந்ததுடன், அத்தேவைப்பாட்டை பூர்த்தி செய்வது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரிகள் தவறியிருந்தனர்.

(ஈ) பள்ளேபத்த மாவட்ட வைத்தியசாலையின் 2014 இன் அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அத்தியவசிய கட்டிடங்களைத் திருத்தியமைத்தல், உயிரியல் மருத்துவ உபகரணங்கள் மற்றும் சிகிச்சை உபகரணங்களைத் திருத்தஞ் செய்தல் மற்றும் புதிதாகக் கொள்வனவு செய்தல் என்பன கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 10 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்வதற்குத் தவறியிருந்தது.

(உ) சந்திரிகா வாவி பிரதேச வைத்தியசாலையின் வெளிவாரி நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சை அலகு மற்றும் நோயாளர்கள் தங்கியிருக்கும் வாட்களில் பயன்படுத்தப்படும் 14 வகைக்குரிய 29 மருத்துவ உபகரணங்கள் விளைவற்ற நிலைமையில் காணப்பட்டன.

(ஊ) தலைமை அமைச்சினால் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒழுக்காற்றுக்கோவைகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயன் முன்னேற்றத்தைப் பரீட்சித்த போது 22 கோவைகளில் பரிசீலனை நடவடிக்கைகள் மந்தமான நிலைமையில் இருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(எ) 2011 சனவரியிலிருந்து 2013 ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியின் வெவ்வேறு காலஎல்லைக்குள் அப்போதைய மாகாண சபையின் பதில் கடமை புரியும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், தலைமை அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக சேவை புரிந்த உத்தியோகத்தரொருவர் உள்ளூராட்சிமன்றத் திணைக்களத்திற்குரிய உத்தியோகபூர்வ வீட்டில் குடியிருந்ததுடன், 2013 ஏப்ரல் 11 ஆந் திகதி இடமாற்றலாகிச் சென்றிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அவ் உத்தியோகபூர்வ விடுதியை முறையாக கையளித்திருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் அவ் உத்தியோகத்தர் குடியிருந்த காலத்திற்குரிய ரூபா 193,256 தொகையான வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஏ) 2002 திசெம்பர் 04 ஆந் திகதிய HRD/PPM/2002/30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அமுலாகும் வகையில் கல்வி குணநல உள்ளீட்டு பயன்பாட்டு கொள்வனவு மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான வழிகாட்டல் கைநூலின் 24.2 ஆம் பந்தி மற்றும் கல்வி அமைச்சினால் 2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலை அடிப்படையிலான குணநலன், போதுமான மற்றும் கட்டமைப்பு அபிவிருத்திக்காக திட்டமிடல் மற்றும் கொள்வனவு தொடர்பான சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல் கைநூலின் 15.2 ஆம் பந்தியின் பிரகாரம் வலயக் கல்விப் பணிப்பாளர் / உதவி கல்விப் பணிப்பாளர்கள் / வலயக் கணக்காளர்கள்/ தொகுதி பொறுப்பு பிரதி/ உதவி பணிப்பாளர்கள் தனித்தனியாக அல்லது குழுவாகவோ பாடசாலைகளுக்குச் சென்று மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தது. 2012, 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளுக்குரித்தாக எம்பிலிபிட்டிய கல்வி வலயத்தில் மேற்பார்வை செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை முறையே 30, 29 மற்றும் 26 ஆக இருந்ததுடன், அவை 24 சதவீதம், 23 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக இருந்தன.

(ஐ) தெஹிஓவிட்ட வலயக் கல்வி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 06 உதவிப் பணிப்பாளர்களின் 2014 ஆம் ஆண்டில் தனித்தனி பாடசாலை மெய்மையாய்வு நடவடிக்கைகளைத் திட்டமிடப்பட்ட 392 சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும், அதில் 300 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஒ) பாடசாலை கணிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கேகாலை வலய அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட 15 உதவிப் பணிப்பாளர்களுக்கும் 56 ஆசிரிய ஆலோசகர்களுக்கும் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது 76 பாடசாலைகளைக் கண்காணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படாமல் 23 பாடசாலைகளில் கண்காணிப்பு நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தன.

(ஓ) கே/மாவ/வேகன்தலே மஹா வித்தியாலயத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 100 வகையான பொருளிப்புப் பொருட்களுக்குரிய பொருட்கள் மற்றும் 360 உபகரண அலகுகளில் பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்காணும் பொருட்டு, பரிசோதனை உத்தியோகத்தரொருவர் 2014 திசெம்பர் 07 ஆந் திகதி வலயக் கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் உடவளவ பிரதேச வைத்தியசாலையில் 2014 ஒக்தோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பொது பொருட் பதிவேட்டில் காணப்படும் 07 உபகரண வகைகளுக்குரிய 27 அலகுகளில் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

(ஔ) மாவனல்ல வலயக் கல்வி ஆலவகத்தினால் பேணப்பட்டிருந்த முறைப்பாட்டுப் பதிவேட்டின் பிரகாரம் 2011 செப்தெம்பர் 28 ஆந் திகதியிலிருந்து 2014 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் முறைப்பாடுகள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஆரம்ப விராணையை நடாத்துவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் அவர்களுக்கு கையளிக்கப்பட்ட 20 ஆரம்ப புலனாய்வு பரிசோதனைகளை மேற்கொண்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், 08 பாடசாலைகளில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பாக கிடைத்த 08 முறைப்பாடுகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தன. மேலும், மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப புலனாய்வுகளில் குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்ட 07 சந்தர்ப்பங்கள் தொடர்பான ஆரம்ப புலனாய்வு அறிக்கை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும், குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்கள்

தொடர்பாக முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான அல்லது ஒழுக்காற்று நடைமுறையொன்று எடுக்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(க) பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்படும் 3390 பாடப் புத்தகங்களும் 200 ஆசிரியர் வழிகாட்டிகளையும் பகிர்ந்தளிப்பதற்கு கே/மா/சுஜாதா கனிஷ்ட வித்தியாலயத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், அதில் 330 பாடப்புத்தகங்கள் பாவனையிலிருந்து அகற்றும் வரையிலும் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கா) வரகாபொல பிரதேச சபை எல்லைக்குரிய தோலங்கமுவ பாலுவத்த வீதிக்காக காணியை கையேற்பதற்கு வரக்காபொல பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 87,405 தொகை அச்செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(கி) இம்புல்பே பிரதேச செயலகத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது காணிக் கச்சேரி நடாத்தப்பட்டிருந்த போதிலும் நீண்டகால குத்தகை காணி விண்ணப்பதாரிகளை இனங்கண்டு அவர்களுக்கு நீண்டகால குத்தகைப் பத்திரத்தை வழங்கியிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் போது தெரிவுசெய்யப்பட்ட நீண்டகால குத்தகை விண்ணப்பதாரிகளுக்காக தேவையான நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 நவம்பர் மாதம் வரையிலும் குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவர்களின் சிலர் குறித்த காணியை பயன்படுத்தி வருவதுடன் அதற்காக வருடாந்த குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) பிரதேச செயலகங்களில் மாகாண சபைக்குரிய பணத்திற்காக வங்கிக் கணக்குகளில் ரூபா 100,000 நிறுத்தி வைக்கப்பட்டு எஞ்சிய பணத்தை மாதாந்தம் மாகாண சபைக்கு அனுப்புமாறு 2007 பெப்ரவரி 22 ஆந் திகதிய CSAC/AP/04/01 ஆம் இலக்க சப்ரகமுவ மாகாணத்தின் பிரதி தலைமைச் செயலாளரின் (நிதி நிர்வாகம்) கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இரத்திபுரி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களால் அதற்கு முரணாக நடவடிக்கையெடுத்தமை காரணமாக 2013 ஆம் ஆண்டின் இறுதியின் போதும் 2014 ஆம் ஆண்டின் செப்தெம்பர், ஒக்தோபர் அல்லது நவம்பர் மாத இறுதியின் போதும் அந்தந்த பிரதேச செயலகங்களின் வங்கிக் கணக்குகளில் ரூபா 213,476,616 தொகையான மீதிகள் காணப்பட்டன. இதனால் மாகாணத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்தக்கூடிய பணம் எவ்வித வட்டியொன்றும் இல்லாமல் வங்கி நடைமுறைக் கணக்குகளில் விளைவற்றுக்கு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(கு) காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அமைச்சில் இடம்பெற்றுள்ள 11 வாகன விபத்துக்கள் தொடர்பாக மாகாண நிதி விதி 55.2 இன்

பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 248,720 தொகை குறித்த நட்டம் இடம்பெற்று 2 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த போதிலும், அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) சுகாதாரத்துறையில் 07 விடயங்கள் தொடர்பாக அறிவூட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6,880,550 தொகையில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,345,022 ஆன தொகை சேமிக்கப்பட்டு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்தந்த நிகழ்ச்சித்திட்டங்களில் சேமிப்புக்கள் 6 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரையான சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன், நிதியத்தினை முழுமையாகப் பயன்படுத்தி குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு இரத்தினபுரி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தவறியிருந்தது.

(கெ) 2001 மார்ச் 28 ஆந் திகதிய நிதி 01/2001 ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு மாகாண சபை உறுப்பினர்களுக்காக கடன் முன்மொழிவுத் திட்டமொன்றை தாபிப்பதற்குரிய சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய ஆகக் கூடிய கடன் எல்லை ரூபா 250,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக சப்ரகமுவ மாகாண சபையின் அமைச்சரவை தீர்மானமொன்றின் அடிப்படையில் சபை செயலகத்தினால் ஒர் உறுப்பினருக்கு ரூபா 500,000 வீதம் கடன் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. மேலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மேற்படி அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து வழங்கப்பட்டிருந்த கடன்தொகையில் 2012 யூன் 27 ஆந் திகதி உறுப்புரிமை இழந்திருந்த 12 உறுப்பினர்களுக்குரிய ரூபா 1,418,600 கூட்டுத்தொகையான கடன் மீதி தொடர்ந்தும் செயலற்றுக் காணப்படுவதாகவும் அக்கடன் தொகையை அறவிடுவதற்காக போதியவிலும் முறையானதுமான நடைமுறைகளும் எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**6.4 மருந்து முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உதுகொடை மாவட்ட வைத்தியசாலை, கேகாலை மற்றும் வரகாபொல ஆயுர்வேத வைத்தியசாலைகளினால் முறையாக மருந்துகளை களஞ்சியப்படுத்தாமை காரணமாக

மருந்துகளின் பாதுகாப்பு மற்றும் தரம் என்பன அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தது.

(ஆ) உடவளவ பிரதேச வைத்தியசாலையில் 05 அத்தியவசிய மருந்துகளுக்குரித்தாக கணக்காய்வு தினமான 2014 திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வரையிலும் தலைமை மருந்துக் களஞ்சியத்தின் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் எதுவித பௌதீக மீதியொன்று காணப்படாதிருந்ததுடன், இப்பற்றாக்குறை தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு உரிய முறையில் தெரியப்படுத்தியுள்ளதாக வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், சரியான மருந்துகள் முகாமைத்துவ முறையொன்று பின்பற்றப்படாததன் காரணமாக 05 மருந்து வகைகளில் 1252 அலகுகள் கணக்காய்வு திகதி வரையிலும் 02 மாதங்களிலிருந்து 11 மாதங்கள் வரையான காலப்பகுதியில் காலாவதியாகியிருந்தது.

(இ) உடவளவ பிரதேச வைத்தியசாலையினதும் பள்ளேபத்த மாவட்ட வைத்தியசாலையினதும் மருந்துக் களஞ்சியங்களின் மருந்து இருப்புப் பதிவேடுகள் முறையாக பேணப்படாதிருந்ததுடன், உடவளவ பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் இருப்பு பதிவேட்டில் இரண்டு நாட்களில மேற்கொள்ளப்பட்ட மருந்துகள் வழங்கல் வைத்தியரின் மருந்து சிட்டையுடன் ஒப்பிடப்பட்ட போது 02 வகை மருந்துகள் தொடர்பாக 1200 அலகுகள் வைத்தியரால் வழங்கப்படாதிருந்த போதிலும், மருந்து பதிவேட்டில் அத்தினத்தின் கீழ் வழங்கலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

## 6.5 மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல்

மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அலுவல்கள் அமைச்சினால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்ட வீதி திருத்தங்கள் மற்றும் பராமரித்தல் ஒப்பந்தங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் களப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கைத்தொழில் | உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி | களப் பரிசோதனை மேற்கொண்ட திகதி | அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| i. | குருவிட்ட தம்பிலியன வீதி கி.மீ. 000 – 1.4 கி.மீ. வரை திருத்தியமைத்தல் | 1,695,328 | 2014.12.04 | முதலில் தார் ஊற்றும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவில் கல் பயன்படுத்தாமை, வடிகாணுக்காக 31 கன மீற்றர் மண் வெட்டபட்டிருக்கவில்லை |
| ii. | ரத்கஹ - பொல்வத்த வீதியினை 0.00 கி.மீ. – 1.25 கி.மீ. வரை திருத்தியமைத்தல் | 2,754,493 | 2014.12.09 | வீதியின் மேற்தளம் 120 கூட்டுத்தொகையான சதுர மீற்றர் அளவு உடைந்திருந்தது. |
| iii. | ஓலுகல, திவுல்பிட்டிய ஊடாக இலுக்வத்த வீதி 0.00 கி.மீ. – 0.53 கி.மீ. வரை பராமரித்தல் | 1,418,638 | 2014.12.09 | முதலில் தார் ஊற்றப்பட்டிருந்த வீதியில் 13 மீற்றர் முழுமையாக மேற்றளம் உடைந்திருந்தது . |
| iv. | பாகொடை லுனுவெல்ல வீதியின் 0.00 கி.மீ. – 0.817 கி.மீ. வரை திருத்தியமைத்தல் | 1,651,908 | 2014.12.09 | இரண்டாம் முறை தார் ஊற்றுதல் 15 சதவீதம் உரிய நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படாமை |
| v. | கடுகாரதெனிய சிறைச்சாலை வீதியின் பக்கச் சுவர் நிர்மாணம் | 1,935,350 | 2014.12.05 | ரூபா 1,085,558 கொடுப்பனவு செய்திருந்த பக்கச் சுவரின் 08 இடங்களில் வெடிப்பு ஏற்பட்டிருந்தது. |
| vi. | பரகடுவ பேவில வீதி 4.5 கி.மீ. - 6.4 கி.மீ. வரை திருத்திய மைத்தல் | 8,106,521 | 2014.12.05 | 21 மீற்றர் தூரத்தில் மேற்றளமும் 49 மீற்றர் தூரத்திற்கு இரண்டு பக்க ஓரமும் உடைந்திருந்தமை மற்றும் மதகு நிர்மாணிக்கப்பட்டிருந்த இடத்தின் வீதியில் 08 சதுர மீற்றர் அளவிலான பிரதேசம் சமமட்டத்தில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இறங்கியிருந்தது. |
| vii. | ஹீரலியத்த விஹாரையின் வீதிக்கு கொங்கிரீட் இடுதல். | 450,000 | 2014.11.11 | வீதியின் மேற்றளத்தின் அடிப்படையில் 4x4 கருங்கற்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், 6x9 கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |

## 6.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 யூன் 04 ஆம் திகதிய FC/SABP/4/2/2014 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு செயலாளரின், கடிதத்தின் பிரகாரம் அழகு கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான ஏற்பாடுகளிலிருந்து அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், நேரடி மானியங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்த முடியாதென குறிப்பிடப்பட்டிருந்தும், அதற்கு முரணாக பிரதேச செயலாளர் செலவினத் தலைப்பின் கீழ் தலைமை அமைச்சின் மூலம் நேரடியாக மானியங்கள் வழங்கலுக்காக ரூபா 1,403,603 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் கீழான 02 செயற்திட்டங்களில் ரூபா 395,200 தொகை கொடுப்பனவு செய்து 208 கூரைத்தகடுகள் கொள்வனவு செய்து 02 விஹாரைகளுக்கு வழங்குவதற்கு குருவிட்ட பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், கூரைத தகடுகள் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த விஹாரைகளை 2015 மார்ச் 20 ஆந் திகதிய பௌதீக ரீதியாகப் பரீட்சித்த போது அவற்றில் எதுவும் அத்திகதி வரையில் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும் அப்பொருட்கள் 2015 சனவரி 12 ஆந் திகதி விஹாராதிபத்தி அவர்களால் பொறுப்பேற்கப்பட்டதாக பிரதேச செயலகத்தின் ஆவணங்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) கல்வி, தகவல், தொழில்நுட்பம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் மீளாய்வாண்டினுள் ரூபா 3,507,669 தொகை செலவு செய்து மேற்கொள்ளப்பட்ட வியட்னாம் கல்விச் சுற்றுலாவிற்காக சேவை வழங்குனரைத் தெரிவுசெய்யும் போது கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன கவனயீனமாகச் செயற்பட்டதால் மாகாண சபைக்கு ரூபா 220,770 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் 5 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 12 மாணவர்களையும் இச்சுற்றுலாவில் பங்குபெறச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கையில் அதற்குச சமூகமளிக்காத 05 மாணவர்களுக்குப் பதிலாக அடுத்து கூடுதலான புள்ளிகளைப்

பெற்ற 05 பிள்ளைகளுக்கு அச்சந்தர்ப்பத்தை வழங்குவது தொடர்பில் எதுவித கவனத்தையும் செலுத்தப்படாதிருந்ததுடன், சமூகமளித்த 07 மாணவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 50,555 கூட்டுத்தொகையான படிகள் 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய மு.க.அ.01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் மாகாண தலைமைச் செயலாளரின் 2014 நவம்பர் 24 ஆந் திகதிய DCS/PT/DO/03/07 ஆம் இலக்க கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக இருந்தது.

(இ) 2009 யூன் 08 ஆந் திகதிய தலைமை அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்த சாரதியொருவருக்காக 2009 யூன் மாதம் முதல் 2014 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக மாகாண கல்வித் திணைக்களத்தினால் சம்பளம் மற்றும் படிகளாக மொத்தம் ரூபா 1,221,032 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 6.7 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அமைச்சினால் உலக வங்கி உதவிகளின் செயற்படுத்தப்பட்டும் Electronic Internal Morbidity & Mortality Register (EIMMR) செயற்திட்டத்திற்காகவும் தலைமை அமைச்சின் கீழ் உள்ள ஏனைய திணைக்களங்களின் தேவைப்பாட்டிற்காகவும் மொத்தம் ரூபா 23,482,000 தொகை செலவு செய்து 236 கணனி இயந்திரங்கள் கொள்வனவின் போது தொழில்நுட்ப விதந்துரைப்புக்கள் தயாரித்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டினை மேற்கொள்ளல் மற்றும் விதந்துரைப்புக்களை பரிசோதித்து பொருட்களை பொறுப்பேற்றல் ஆகிய செயற்பாடுகளை மோசடியான தன்மையில் நிறைவேற்றிய காரணத்தினால் மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 2,153,500 தொகை கூடுதலாகச் செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது.

(ஆ) கல்வி, தகவல், தொழில்நுட்பம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் கல்வி முறைமை அறிவூட்டல் கேந்திரத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 09 மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களுக்காக தகவல் தொழில்நுட்பத்துடன் அண்மித்த உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட பொருட்கள் என்பவற்றை வழங்கி கொண்டு வந்து கையளித்து தாபிப்பது தொடர்பில் மொத்தம் ரூபா 60,372,500 செலவு செய்யப்பட்டு 589 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் போது தொழில்நுட்ப விதந்துரைப்புக்கள் தயாரித்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டினை மேற்கொள்ளல் மற்றும் விதந்துரைப்புக்களை பரிசோதித்து பொருட்களை பொறுப்பேற்றல் ஆகிய செயற்பாடுகளை மோசடியாகவும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாகவும் நிறைவேற்றிய காரணத்தினால் வழங்குனருக்கு மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 7,961,513 தொகை கூடுதலாகச்

செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது.

## 6.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 6.8.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மாகாண சபைக்குரிய பல்வேறு நிறுவனங்களில் கீழே விபரிக்கபட்டுள்ளவாறு பௌதீக வளங்கள் விளைவற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டதுடன், அது தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | சொத்துக்களின் தன்மை | எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | பயன்படுத்தப்படாதிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (அ) | காணி | 13 | - | 09 ஆண்டுகள் |
| (ஆ) | கட்டிடங்கள் | 15 | - | 09 ஆண்டுகள் |
| (இ) | வாகனங்கள் | 19 | - | 10 ஆண்டுகள் |
| (ஈ) | இயந்திர உபகரணங்கள் | 14 | 809,886 | 14 ஆண்டுகள் |
| (உ) | மருத்துவ உபகரணங்கள் | 14 | - | - |
| (ஊ) | அலுவலக உபகரணங்கள் | 04 | - | - |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி கேகாலை உதவி அளவீட்டு அத்தியட்சகரின் கையொப்பத்துடன் தயாரிக்கப்பட்டிருந்த அளவீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் 106 ஏக்கர், 01 ரூட், 11 பேர்ச் அளவிலான காணி உதுகொடை கால்நடை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் காணியின் எல்லைகள், அரச நில அளவையாளரொருவரால் நிறுவகத்தின் 05 உத்தியோகத்தர்களுக்கு முன்னால் 2012 யூன் 26 ஆந் திகதி சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 24 ஆந் திகதி வரையிலும் குறித்த எல்லைகளைத் தொடர்புபடுத்தி பாதுகாப்பு வேலியொன்று நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன், இக்காணியின் அளவிற்குரிய உரிமையை உறுதிப்படுத்துவதற்காக காணியின் உரித்துறுதியும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் நிறுவனங்களில் இருந்த பயன்படுத்தப்படாத (செயற்படும் மற்றும் செயற்படாத) அலுவலக உபகரணங்கள், விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் 340 மருத்துவ

உபகரணங்கள் என்பன அதிகாரமின்றி இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தமது தற்றுணிவின் பிரகாரம் சுகாதாரத்துறைக்கோ அல்லது சப்ரகமுவ மாகாண சபைக்கோ எதுவித தொடர்பும் இல்லாத நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) சப்ரகமுவ மாகாண சபை நிதி விதி இலக்கம் 476 இன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது அத்தினத்திற்கு அண்மித்ததாக பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு திணைக்களங்களிலோ அல்லது திணைக்களத்தின் கிளைகளிலுள்ள பொருட்களை மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிவித்திகல வலயத்திற்குரிய 141 பாடசாலைகளில் 2013, 2012 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை முறையே 20, 07 மற்றும் 03 ஆக இருந்ததுடன், எந்தவொரு ஆண்டிலும் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாத பாடசாலைகள் 71 ஆகவும் 2005 ஆம் ஆண்டின் பின்னர் கணக்காய்வு திகதியான 2014 திசெம்பர் வரை பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கை 33 ஆக இருந்தமை கண்டறியப்பட்டது. எம்பிலிப்பிட்டிய கல்வி வலயத்திற்குரிய 128 பாடசாலைகளில் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட பாடசாலைகள் முறையே 16, 27, 22, 03, 16 மற்றும் 14 மாத்திரமாக இருந்தது.

(ஈ) இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் வருகின்ற வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் உட்பட 95 நிறுவனங்களில் 91 இல் 2014 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வினை கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 03 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்படாதிருந்ததுடன், இந்நிறுவனங்களில் கடந்த ஆண்டுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்வதில் தாமதம் 01 ஆண்டு முதல் 16 ஆண்டுகள் வரையாக இருந்தது.

(உ) சந்திரிக்கா வாவி வைத்தியசாலையின் தங்கியிருந்து சிகிச்சை பெறும் திடீர் விபத்து நோயாளிகளுக்காக 1998 மார்ச் 30 ஆந் திகதி திறக்கப்பட்ட புதிய கட்டிடம், கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் 10 ஆந் திகதியில் முழுமையாக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், கூரையின் சில இடங்கள் உடைந்து விழுந்தும் கதவு, யன்னல் கண்ணாடிகள் உடைந்து கட்டிடம் சிதைவடைந்து காணப்பட்டது.

(ஊ) இர/ஸ்ரீ வலகம்பா மஹா வித்தியாலயத்தின் 12 கணனிகள் செயற்படாத நிலைமையில் காணப்பட்டதுடன், அதில் 04 கணனிகளின் உப பாகங்கள் காணாமல் போயிருந்தமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**6.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் உள்நாட்டு மற்றும் சுகாதாரத்திற்கு சாதகமான உணவு வகைகளை மேம்படுத்துவதற்காக நடாத்தப்பட்டு வந்த சுவரஸஹல சிற்றுண்டிச்சாலை 2013 மார்ச் 12 ஆந் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் ரூபா 12,000 படி மாதாந்த வாடகைக்கு வழங்கி தேறிய இலாபமொன்றை பெற்றுக்கொண்டிருந்த போதிலும், தலைமை அமைச்சரின் தீர்மானத்தின் அடிப்படையில் தற்போது ஆயுர்வேத திணைக்களத்தின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின்ற உணவு விடுதியாக மாற்றப்பட்டிருந்தது. மேலும், 2014 ஆம் ஆண்டில் வருமானத்தையும் மொத்த செலவினங்களையும் கருத்திற் கொள்ளும் போது ரூபா 1,357,865 ஆன தேறிய நட்டமொன்று அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், இந்த முறையற்ற தீர்மானத்தினால் மாகாண சபைக்கு 2014 ஆம் ஆண்டினுள் ரூபா 1,501,865 ஆன நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) சப்ரகமுவ மாகாணத்தின் தலைமை அமைச்சரினால் சப்ரகமுவ மாகாண நூலக சேவைகள் சபையின் தலைவராக ஓய்வுபெற்ற மாகாண கல்விப் பணிப்பாளரொருவர் நியமிக்கப்பட்டு 2014 பெப்ரவரி 03 ஆந் திகதி முதல் 2015 மார்ச் மாதம் வரை மாதாந்த படிகள், எரிபொருள் மற்றும் தொலைபேசிப் படிகளாக மொத்தம் ரூபா 775,999 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக் கொடுப்பனவு 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை மீண்டும் சேவைக்கு ஈடுபடுத்துதல் தொடர்பான பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவர் அமைச்சின் செயலாளரோ அல்லது சமமான பதவியொன்றுக்கான நியமனங்களுக்கு மாதாந்த படிகள் மாத்திரமாக இருந்தும் நூலகம் 2015 மார்ச் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் மேற்படி கொடுப்பனவு தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(இ) சப்ரகமுவ மாகாணத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு வெளிநாடுகளுடன் இணைந்து 06 பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 8,966,481 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை. அந்தந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கணக்காய்வினால் பரீட்சித்த போது அச்செயற்திட்டங்கள் தொடர்பாக முழுமையான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததாகவும்,

செயற்படுத்துவதில் உரிய அதிகாரமொன்று இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும், அந் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தொடர்ச்சியான வெளிநாட்டு சுற்றுலாக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. அத்தகைய 04 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தலைமை அமைச்சர் நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக சுற்றறிக்கைகளின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாடுகளின் அழைப்பின் பேரில் பல்வேறு சமய மற்றும் கலாசார நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் அந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 04 சந்தர்ப்பங்களில் தலைமை அமைச்சர் மற்றும் தனிப்பட்ட செயலாளரால் மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 2,620,064 தொகை செலவு செய்து வெளிநாடு சென்றிருந்தனர்

(உ) 2014 ஆம் ஆண்டின் போது முன்னாள் ஆளுனரினால் ஆளுனர் அலுவலகத்தின் மூலம் நினைவுச் சின்னங்களை வழங்குவதற்காக ரூபா 18,549,089 தொகை செலவு செய்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அக்கொள்வனவுகள், கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 3.4, 5.6, 7.8 மற்றும் 7.9 ஆகிய வழிகாட்டிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. குறித்த வழங்குனரிடமிருந்து பொருட்களைப் பொறுப்பேற்றல் மற்றும் கொடுப்பனவு செய்தல் என்பன முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் இப்பொருட்களை முன்னாள் ஆளுனரினால் தமது விருப்பின் பேரில் தனிப்பட்ட நினைவுச் சின்னங்களாக பல்வேறு தரப்பினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. மேலும் இப்பொருட்கள் எத்தரப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதென்பது தொடர்பாக தகவல்கள் உள்ளடக்கப்பட்ட எந்தவொரு எழுத்துமூலச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) ஆளுனர் அலுவலகத்தினால் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் சமய புத்தகங்கள் உட்பட அச்சீட்டுப் புத்தகங்கள் கொள்வனவிற்காக மூலதன செலவின விடயங்களின் கீழ் ரூபா 23,860,187 கூட்டுத்தொகையும் வருமானச் செலவினங்களின் கீழ் ரூபா 18,115,855 கூட்டுத்தொகையும் செலவிடப்பட்டிருந்தன. அச்செலவின விடயங்களில் 08 செலவின விடயங்கள் தொடர்பாக வருடாந்த மதிப்பீட்டில் உரிய நியம செலவின விடய விபரங்களுக்கு முரணாக புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 35,183,362 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன், அசாதாரணமான முறையில் செலவின விடயங்களுக்கு அதிகளவிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.ஆளுனர் அலுவலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றோ தயாரிக்கப்படாதிருந்தமையும் 2015 சனவரி 30 ஆந் திகதி வரையிலும் 58,384 புத்தகங்கள் அளவில் எத்தரப்பினருக்கும் பகிர்ந்தளிக்கப்படாதிருந்தமை கணக்காய்வின்

போது கண்டறியப்பட்டது.

(எ) மோட்டார் வாகனச் சட்டத்தின் (200 ஆவது அதிகாரம்) கட்டளையின் பிரகாரம் பதிவுசெய்வதற்கான தகைமை, வாகனத்தை ஓட்டக்கூடிய பாடசாலையொன்றின் முன்னேற்றம், வாகனத்தை ஓட்டக்கூடிய மதியுரையாளரரொருவரிடம் இருக்க வேண்டிய தகைமைகள் மற்றும் வாகனங்களை செலுத்தும் பாடசாலைகளினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் தகைமை தொடர்பாக குறிப்பான தெளிவுபடுத்தல்கள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், ஏதெனுமொரு சந்தர்ப்பத்தில் அக்கட்டளைகளுக்கு இணங்கும் வகையில் நடவடிக்கை எடுக்காத ஏதேனுமொரு பாடசாலையோ அல்லது மதியுரையாளரினதோ அனுமதிப்பத்திரத்தை செல்லுபடியற்றதாக்கும் அதிகாரம் மோட்டார் வாகன ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறிருக்கையில் அக்கட்டளைகளின் பிரகாரம் தகைமைகள் தீர்மானிக்கப்பட்டு வாகன செலுத்தும் பயிற்சிப் பாடசாலைகளைத் தெரிவுசெய்வதற்குப் பதிலாக அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக சப்ரகமுவ மாகாணத்தின் பிரதி பிரதான செயலாளரால் (திட்டமிடல்) புதிய தகைமைகள் நிர்ணயிக்கப்பட்டு அதன் பிரகாரம் பயிற்சி பாடசாலைகளைத் தெரிவு செய்தமையால் குறைந்த விலை அடிப்படையில் கொள்வனவை வழங்க முடியாதிருந்தது. இதனால் ரூபா 167,750 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், அத்தொகையினைக் கொண்டு மேலும் இரண்டு பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பமும் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மோட்டார் வாகன கட்டளைகள் மற்றும் அதன் அடிப்படையில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் அதிகார எல்லையை விஞ்சும் வகையில் மேலதிக தகைமைகளை நிர்ணயித்தல் கணக்காய்வின் போது சிக்கலானதொன்றாக இருந்தது.

## 6.10 பயனற்ற செலவினம்

சப்ரகமுவ மாகாண சபையின் வருமான உருவாக்கம் மற்றும் மேம்படுத்தலுக்கான விசேடமான நிலையான குழுவொன்று உருவாக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன், அதன் நோக்கம் எதுவும் நிறைவேற்றப்படாதிருந்தமை குழு அறிக்கை மற்றும் மாகாண இறைவரித் திணைக்களத்தின் கடந்த ஆண்டுகளின் வருமான சேகரிப்பு தொடர்பான பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எனினும் 2013 பெப்ரவரி முதல் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரித்தாக இக்குழுவின் உறுப்பினர்களுக்கு வருகைப் படிகள், மாதாந்தப் படிகள் மற்றும் ஊக்குவிப்புப் படிகளாக மொத்தம் ரூபா 1,390,095 செலுத்தப்பட்டிருந்ததுடன், குழுவின் செயலாளர் நியமனத்தின் போது ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை மீண்டும் சேவைக்கு ஈடுபடுத்துதல் தொடர்பாக விநியோகிக்கப்பட்டுள்ள 2007 மே 11 ஆந்

திகதிய 2007/09 ஆம் இலக்கம் மற்றும் 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 2007/09(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 6.11 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக நேரடி ஒப்பந்தத்தை வழங்கும் போது 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத் தலைவர் மற்றும் பிரதேசத்தின் பிரதேச செயலாளர் ஆகியோரால் நியமிக்கப்படுகின்ற இரண்டு முகவர்களுடன் கூடிய மூன்று நபர்களைக் கொண்ட குழுவொன்றின் மூலம் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பரிசோதித்ததன் பின்னர் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்பின் / சங்கத்தின் அதிகாரப் பிரதேச எல்லைக்குள் உரிய ஒப்பந்தங்கள் மாத்திரம் கையளிக்கப்பட வேண்டும். மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் மீளாய்வாண்டின் போது 18 நிர்மாண ஒப்பந்தங்களை சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு கையளிக்கும் போது அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த ஒப்பந்தக்காரரால் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதிக்கு சமமான முழுமையான காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இரண்டு அமைச்சுக்களினால் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் செயற்படுத்தப்பட்ட 03 நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான காப்புறுதி மேவுகையொன்றை பெற்றுக்கொள்ளாத ஒரு சந்தர்ப்பத்தில் இயற்கை அனர்த்தம் காரணமாக சேதத்திற்குட்பட்ட நிர்மாணமொன்றை சரிப்படுத்துவதற்காக காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி, கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சினால் ரூபா 2,624,873 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 02 மாகாண அமைச்சுக்களினால் செயற்படுத்தப்பட்டிருந்த 05 நிர்மாண கைத்தொழில்கள் தொடர்பில் ரூபா 792,090 கூட்டுத்தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், 04 நிர்மாண கைத்தொழில் தொடர்பாக நிறைவேற்றப்படாத 09 உருப்படிகளுக்காக ரூபா 157,557 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(உ) காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி, கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சினால் 2014 ஆம் ஆண்டினுள் கைவிடப்பட்டிருந்த வயல் காணிகளை பயிர்ச்செய்கைக்கு ஈடுபடுத்தும் நோக்கில் ரூபா 2,009,519 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 விவசாய செயற்திட்டங்கள் தொடர்பாக எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை களப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஊ) பம்பரதென வாவியை அமைப்பதற்குரிய வேலைக்கான சாத்தியள அறிக்கை தயாரிக்கும் போது குறித்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் 30 ஏக்கர் அளவிலான பயிர்ச்செய்கைக்கு நீர் வழங்கப்பட்டு வருவதாகவும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மேலும் 15 ஏக்கருக்கு நீரை வழங்க முடியுமென குறிப்பிடப்பட்டு ரூபா 520,000 ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2014 செப்தம்பர் 17 ஆம் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வாவியில் சேரும் நீரை பயிர்ச்செய்கைக்குப் பெற்றுக்கொள்வதற்கு கால்வாயொன்று காணப்படாமை மற்றும் வாவியிலிருந்து வெளியேறும் நீர் எதுவித பயிர்ச்செய்கைக்கும் எடுக்க முடியாத பள்ளமான காட்டிற்கு செல்வதாகவும் ரூபா 361,059 செலவு செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த இந்நிர்மாண வேலைக்காக ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு போலியான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(எ) பொருளாதார அமைச்சினால் 2010 ஆம் ஆண்டின் போது ஜாதிக சவிய கமநெகும விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 11,000,000 தொகையான ஏற்பாட்டில் மாகாண காணி அமைச்சு செயலாளரினால் ரூபா 8,793,408 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த கல்பொக்குஓய வாவி மறுசீரமைப்பிற்கான வேலைக்குரிய கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 3.2 ஆம் பிரிவிற்கு முரணாக தேசிய போட்டி விலை கோரல் மேற்கொள்ளப்படாமல் கொள்வனவுக் குழு பரிந்துரையின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட விலைகோரல் மூலம் மேற்படி வேலை வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2012 ஏப்ரல் 15 ஆந் திகதி (பராமரிப்புக் காலத்தினுள்) இந்நிர்மாணத்திற்குரிய பிரதான சுவர் தொடர்பாக ஒரு துணை சுவரொன்று உடைந்து விழுந்தமை தொடர்பாக நியமிக்கப்பட்டிருந்த பரிசோதனைக்குழு அறிக்கையின் பிரகாரம், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2012 ஒக்தோபர் 22 ஆந் திகதி ரூபா 925,000 பெறுமதியான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த பதலங்கல நீர் செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டில் கணக்காய்வின் போது பரிசோதனை செய்த போது செய்யப்பட்ட வேலையை இடைநடுவில் நிறுத்தப்பட்டமை தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு

வழங்கியிருந்த பதிலின் மூலம் செயற்திட்டத்தின் வேலைகள் 2014 மே 12 ஆந் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக அதனை செயற்திறனான செயற்திட்டமொன்றாக மாற்றுவதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், 2014 நவம்பர் 18 ஆந் திகதி மேற்கொண்ட மீள் பரிசோதனையின் போது செயற்திட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருந்த வேலைகளில் எதுவித முன்னேற்றமும் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(ஐ) மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் என்பவற்றினால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்ட 05 நிர்மாணங்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | அமைச்சு/ திணைக்களம் | கைத்தொழில் | உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி | களப் பரிசோதனை மேற்கொண்ட திகதி | அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் |
|---|---|---|---|---|---|
| | ------------- | --------------- | ------------------ | ----------------- | -------------------------------------- |
| | | | ரூபா | | |
| i. | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | உதுகொடை பண்ணையின் 04 ஆம் இலக்க உத்தியோகபூர்வ விடுதியை திருத்தியமைத்தல் | 829,501 | 2015.02.06 | 6 செலவின விடயங்கள் மதிப்பீட்டின் பிரகாரம் உரிய நியமமொன்றில்லாமல் நிறைவேற்றியிருந்தமை |
| ii. | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | ருவன்வெல கால் நடை வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ விடுதியை திருத்தியமைத்தல் | 773,722 | 2015.02.27 | 4 செலவின விடயங்கள் உரிய நியமமொன்றில்லாமல் நிறைவேற்றியிருந்தமை மதிப்பீடு செய்யப்படாத உருப்படிகள் நிறைவேற்றப் பட்டமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| iii. | - மேற்படி - | கோனகும்புற மேல் ஸ்ரீ முந்தன் கோவில் நிர்மாணம் II ஆம் கட்டம் | 875,000 | 2014.11.19 | நான்கு சுவர்களில் 07 இடங்களில் வெடிப் பேற்பட்டிருந்தன. |
| iv. | - மேற்படி - | வெலிகும்புற ஹேன பன்சல வீதிக்கு கொங்கிரீட் இடல் | 1,571,673 | 2014.12.09 | கொங்கிரீட் முழுவதும் உயர்ந்த மற்றும் தாழ்ந்த இடங்கள் காணப்பட்டது. |
| v. | - மேற்படி - | கதன்கொடை பெதும் உயன வீதியின் ஆரம்ப பகுதியின் பக்கச் சுவர் நிர்மாணித்தல். | 1,204,834 | 2014.12.10 | சக்கை கற்கள் சுவர் இரண்டு இடங்களில் வெடிப் பேற்பட்டிருந்தன. |

## 6.12 தாமதமான செயற்திட்டங்கள்/ முழுமையாக கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

அமைச்சுக்கள் / திணைக்களங்கள் 04 இனால் செயற்படுத்தப்பட்ட 11 நிர்மாண ஒப்பந்தங்கள் வெவ்வேறு காரணங்கள் காரணமாக தாமதமாகியிருந்ததுடன், அமைச்சுக்கள் / திணைக்களங்கள் 02 இன் 72 நிர்மாண ஒப்பந்தங்கள் ஆரம்பிக்கப்படாமல் முழுமையாக கைவிடப்பட்டிருந்தன.

## 6.13 பதவியணியினர் நிர்வாகம்

### 6.13.1 கல்வித் துறையில் பதவியணியினரின் மிகைகள் மற்றும் பற்றாக்குறை

மாகாண கல்வித் திணைக்களத்தினால் சப்ரகமுவ மாகாணத்தின் பாடசாலைகளில் தற்போதைய ஆசிரியர் தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த தகைமையுடைய ஆசிரியர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது வெவ்வேறு விடயங்கள் தொடர்பாக பின்வருமாறு ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் மிகைகள் காட்டப்பட்டுள்ளன.

| தரம் 6 முதல் தரம் 11 வரை | | | | | தரம் 12 முதல் தரம் 13 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விடயம் | புற்றாக்குறை | | மிகை | | விடயம் | புற்றாக்குறை | | மிகை | |
| | வலயங்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | வலயங்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | | வலயங்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | வலயங்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
| ஆங்கிலம் | 04 | 56 | 03 | 66 | விஞ்ஞானம் மற்றும் மேலதிக பாடங்கள் | 04 | 17 | 03 | 34 |
| தொழில்நுட்ப பாடம் | 01 | 23 | 06 | 207 | கலை,வணிக பாடங்கள் | 04 | 125 | 03 | 53 |
| ஏனைய பாடங்கள் | 01 | 10 | 06 | 633 | தொழில்நுட்ப பாடங்கள் | 03 | 07 | 03 | 14 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய ஈடீ/1/27/1/5/1/2007 கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பிரிவின் மூலம் மிகவும் வசதியான பாடசாலையொன்றில் 06 வருடங்களும், வசதியான பாடசாலையொன்றில் 08 வருடங்கள் என சேவைக்காலம் தீர்மானிக்கப்பட்டிருக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் இரத்தினபுரி மாவட்டத்தின் 02 கல்வி வலயங்களின் 179 பாடசாலைகளில் 913 ஆசிரியர்கள் 09 வருடங்கள் முதல் 35 வருடங்கள் வரையான காலப்பகுதியிலும் கேகாலை மாவட்டத்தின் மாவனல்ல வலயத்தின் 101 ஆசிரியர்கள் 20 வருடங்கள் முதல் 35 வருடங்கள் வரையான காலப்பகுதியிலும் ஒரே பாடசாலையில் சேவை புரிந்து வருகின்றனர்.

(ஆ) 2003 நவம்பர் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 2.1.2 மற்றும் 2.1.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பாடங்களை கற்பிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் வாரமொன்றிற்கு சராசரி 40 நிமிடங்களை கொண்ட 35 பாடவேளைகளையும் பாடங்களை கற்பிப்பதற்கு மேலதிகமாக வகுப்பிற்கு பொறுப்பாக உள்ள ஆசிரியர்கள் வாரமொன்றிற்கு ஆகக்குறைந்தது 33 பாடவேளைகளும், உயர்தர ஆசிரியர்கள் வாரமொன்றிற்கு 30 பாடவேளைகளும் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். ஏவ்வாறாயினும் இரத்தினபுரி

மாவட்டத்தின் 03 கல்வி வலயங்களில் 04 பாடசாலைகளினால் அதற்கு முரணாக பாடவேளைகளை ஒதுக்கியமையால் மீளாய்வாண்டின் போது 80 ஆசிரியர்கள் 15044 பாடவேளைகள் அதாவது 10028 மணித்தியாலங்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு புறம்பாக விளைவற்ற வகையில் இருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. மேலும் மாவனல்ல கல்வி வலயத்தின் சுஜாதா கனிஷ்ட வித்தியாலயத்தின் 06 முதல் 11 ஆம் தரத்திற்கான 47 ஆசிரியர்கள் வாரமொன்றின் 19 பாடவேளைகள் முதல் 33 வரை மாத்திரம் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

(இ) கேகாலை கல்வி வலயத்திற்குரிய 14 நகர பாடசாலைகளில் 113 ஆசிரியர்கள் மிகையாகவும் கிராமிய பாடசாலைகளில் 64 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவும் காணப்பட்டதுடன், வலயக் கல்வி அலுவலகத்தில் 31 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவையில் 31 பேர் மிகையாக காணப்பட்டன.

(ஈ) மாவனல்ல கல்வி வலயத்திற்குரிய மாகாண சபை பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 2555 ஆக இருந்த போதிலும், அதற்காக 2848 பேர் இணைக்கப்பட்டமையால் 290 ஆசிரியர்கள் மிகையாக இருந்த போதும் முறையற்ற விதத்தில் இணைத்தமையால் 46 பாடசாலைகளில் 120 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை காணப்பட்டது. மேலும் வசதிகளுடன் கூடிய நகர பாடசாலைகளுக்கு ஒரு பாடப்பரப்பின் கீழும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி இரண்டு மடங்கு இணைக்கப்பட்டிருந்ததுடன், வசதிகள் குறைந்த கிராமப்புற பாடசாலைகளுக்கு அப்பாடப்பரப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையோ இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாவனல்ல கல்வி வலயத்திற்குரிய சுஜாதா கனிஷ்ட வித்தியாலயத்தின் ஆசிரியர் சேவையின் இரண்டு பேர் கல்வி நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாசிரியர்கள் கற்பித்தலை மேற்கொண்ட 7 - 11 ஆம் தரங்களில் உரிய பாடவேளைகளை வேறு ஆசிரியர்களைக் கொண்டு மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 47 ஆசிரியர்கள் 2014 ஆம் ஆண்டில் அறிவிக்காமல் சேவைக்கு வருகை தராமல் இருந்ததுடன், அவ் ஆசிரியர்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பின்னவெல தமிழ் மஹா வித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பாக அதன் அதிபர் மற்றும் பிரதி அதிபர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு ஆரம்ப புலனாய்வு அறிக்கை 2008 மார்ச் 19 ஆந் திகதி மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம் முறையான ஒழுக்காற்றுப்

பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், ஆரம்ப புலனாய்வு அறிக்கையின் பரிந்துரை அடிப்படையில் 07 ஆசிரியர்களுக்கு எழுத்துமூல எச்சரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.13.2 சுகாதாரத் துறையின் மிகைகளும் பற்றாக்குறையும்

சுகாதாரத்துறையில் ஒவ்வொரு சேவைகளிலும் ஊழியர் மிகை அல்லது பற்றாக்குறை என்பன வெவ்வேறு நிறுவன மட்டமாக கீழே காட்டப்பட்டுள்ளன.

| | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | | இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் மாகாண வைத்தியசாலைகள் | | கேகாலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் கேகாலை மாவட்டத்தின் மாகாண வைத்தியசாலைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை |
| மருத்துவர்கள் | - | 08 | - | 137 | - | 50 |
| தாதிகள் | - | 01 | - | 111 | 23 | 17 |
| மருந்தாளர்கள் | - | 02 | - | 09 | - | 11 |
| பொது சுகாதார பரிசோதகர்கள் | - | - | - | 36 | - | 09 |
| குடும்ப சுகாதார உத்தியோகத்தர் | - | - | - | 165 | - | 93 |
| மருந்து கலக்குபவர் | - | - | | 51 | - | 30 |
| மேற்பார்வையாளர் | - | - | - | 83 | - | 45 |
| சாரதிகள் | - | - | - | 21 | - | 17 |
| சமையற்காரர் | - | - | - | 22 | - | 12 |
| காவற்காரர் | - | - | - | 51 | - | 20 |
| பிரேத அறை தொழிலாளர் | - | - | - | 54 | -- | 30 |
| கணக்காளர் | 03 | - | - | - | - | 02 |
| வைத்திய ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் | - | - | - | 20 | - | 07 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் | 25 | - | - | 18 | - | 13 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | 22 | 06 | 24 | 23 | - |
| சுகாதார செயற்பாட்டு உதவியாளர் | - | 04 | 22 | 56 | 161 | 44 |
| பொது சுகாதார கள உத்தியோ கத்தர் | - | - | - | 11 | 12 | - |
| | | ---- | ---- | ----- | ------ | ----- |
| மொத்தம் | = | 65 | 28 | 869 | 219 | 400 |
| | | == | == - | =-== | === | === |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் தொடர்ந்தும் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாவனல்ல, வரகாபொல, கரவனல்ல ஆகிய மூன்று ஆரம்ப வைத்தியசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட தாதி பதவியணியினரின் எண்ணிக்கை 345 பேராக இருந்த போதிலும், அதற்காக 363 பேர் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 11 கிராமிய வைத்தியசாலைககளில் அங்கீகரிக்கப்பட்ட தாதி பதவியணியினரின் எண்ணிக்கை 26 பேராக இருந்த போதிலும், ஒரு தாதி உத்தியோகத்தரேனும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கேகாலை மாவட்டத்தின் 22 மத்திய மருந்தகங்களில் வைத்தியர் மற்றும் தாதி பதவிகள் தவிர ஏனைய சேவைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கையை மிகைத்து 36 பேர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) 04 வாட்களுடன் கூடிய பெலிகல கிராமிய வைத்தியசாலையின் அனைத்து சேவை தொகுதிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 33 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான பதவியணியினரின் எண்ணிக்கை 06 ஆக இருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் 07 பதவிகள் தொடர்பாக ஆயுர்வேதத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் 65 பேர் மிகையாகவும் 80 பேர் பற்றாக்குறையாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அதில் 25 பற்றாக்குறைகளையும் மிகைகளையும் ஈடுசெய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.14 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 மார்ச் 18 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க பொது செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் 2006 ஒக்தோபர் 23 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அதிமேதகு சனாதிபதி அவர்களின் கடிதத்தின் பிரகாரம் தலைமை அமைச்சருக்கு இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களும் ஒரு பாதுகாப்பு வண்டி மாத்திரம் ஒதுக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறெனினும் அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 12 வாகனங்கள் தலைமை அமைச்சரினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வாகனங்களை பராமரிப்பதற்கும் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் 2014 ஆம் ஆண்டில் அமைச்சினால் ரூபா 3,030,297 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் தலைமை அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியினரின் மூன்று உத்தியோகத்தர்களாலும் தனிப்பட்ட பதவியணியினருக்கு உட்படாத இரண்டு நபர்களாலும் தலைமை அமைச்சரின் கடமைகள் எனக் குறிப்பிட்டு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன், அங்கீகாரமில்லாமலும் 04 குழாம் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக எரிபொருளுக்காக ரூபா 692,516 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) உள்ளுராட்சி மன்ற திணைக்களத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்று 2012 நவம்பர் 27 ஆந் திகதி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபைக்கு திருத்தங்களுக்காக கையளிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 23 ஆம் திகதி வரையிலும் அவ்வாகனத்தை திருத்தியமைப்பதற்கோ அல்லது அது தொடர்பாக எடுக்கப்பட வேறு நடைமுறையொன்றோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.15 வங்கிக் கணக்கிணக்கம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 மாதங்கள் காலம் கடந்த வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 2,642,338 கூட்டுத்தொகையான 204 காசோலைகள் தொடர்பாக சப்ரகமுவ மாகாண நிதி விதி 283.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 06 மாதங்களுக்கு மேற்பட்ட தீர்வையாகாத ரூபா 451,012 தொகையான வைப்புக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 16 வங்கிக் கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத வரவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 26,908,423 ஆக இருந்ததுடன், 16 வங்கிக் கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத செலவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 110,931,465 ஆக இருந்தது.

**6.16. போதியளவில் நிறைவேற்றப்படாத நோக்கங்கள்**

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு துறையினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை நோக்கமான சமூக ரீதியில் அசாதாரணத்திற்குட்பட்ட பிள்ளைகளை நிறுவனமயப்படுத்துவதினூடாக நல்ல பிரசைகளாக மீண்டும் சமுகமயப்படுத்துவதுடன், நன்னடத்தைப் பொறுப்பில் உள்ள பிள்ளைகளின் அன்றாட தேவைகள் நலன்புரி உட்பட உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்ற தேவைப்பாடுகளாகும். அதற்கு முக்கியமான சிறுவர்களின் உடல், உள சுகாதார அபிவிருத்திக்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல், அறிவு மற்றும் இயலளவு அபிவிருத்தி ஊடாக தொழில் பயிற்சியொன்று வழங்குதல் போன்ற துறைகள் தொடர்பில் திணைக்களம் போதியளவு கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**07. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**7.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

04 திணைக்களங்களினால் மீளாய்வண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டினுள் ஒரு அமைச்சு மற்றும் 07 திணைக்களங்கள் என்பன உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

மீளாய்வாண்டின் போது 12 அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் ஒன்று வீதமும், 10 திணைக்களங்களுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் 02 வீதமும் நடாத்தப்பட்டிருந்ததுடன், 05 அமைச்சுக்கள் / திணைக்களங்கள் தொடர்பாக எந்தவொரு குழுவொன்றும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**7.4 கொள்வனவுத் திட்டம்**

04 அமைச்சுக்கள் / திணைக்களங்களினால் மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

4 வருமானக் குறியீடுகளுக்குரிய மீளாய்வாண்டின் வருமானங்களை மதிப்பீடு செய்யும் போது, 2013 ஆம் ஆண்டின் உள்ளவாறான வருமானம் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படாதிருந்ததுடன், ரூபா 169,910,996 தொகை குறைவாகவும் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அனைத்து வருமானக் குறியீடுகளிலும் 2013 ஆம் ஆண்டிற்குரிய வருமானம் 2012 இன் உள்ளபடியான வருமானத்தை விட அதிகரித்திருந்தது.

**7.6 தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

மாகாண கணக்குகள் குழுவில் கலந்துரையாடப்பட்ட 2001 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட 02 திணைக்களங்களுக்குரிய 24 கணக்காய்வு பந்திகள் தொடர்பாக உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது குறித்த சப்ரகமுவ மாகாண சபையின் நிறுவனத் தலைவர்களுக்கும் தலைமைச் செயலாளருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்
(ஆ) சொத்துக்களும் மனித வள முகாமைத்துவமும்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) செயற்திட்ட அமுலாக்கல்
(உ) பாடசாலைகள் முகாமைத்துவம்
(ஊ) வைத்தியசாலைகள் முகாமைத்துவம்